# மாமனிதர் கௌரவம் திரு.சச்சிதானந்தசிவம்



மாமனிதர் சச்சிதானந்தசிவம்

தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

தமிழீழ தேசத்தின் விடிவிற்காகவும், விடுதலைக்காகவும் அயராது பாடுபட்ட ஒரு அற்புதமான மனிதரை நாம் இன்று இழந்து விட்டோம். இந்த நல்ல மனிதரை இழந்து எமது தேசம் இன்று சோகக் கடலில் மூழ்கிப்போய்க் கிடக்கிறது.

ஞானரதன் அண்ணை என அனைவரும் அன்போடு அழைக்கும் திரு.வை.சச்சிதானந்தசிவம் அவர்கள் ஒரு நல்ல மனிதர். நெஞ்சத்தில் நேர்மையும் உள்ளத்தில் உயர்ந்த எண்ணமும் கொண்டவர். எளிமை அவரோடு கூடப் பிறந்தது. அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொள்வார். அனைவரையும் கவர்ந்துகொண்ட உயரிய பண்பாளர்.

இவர் ஒரு சிறந்த தேசபக்கதர். எமது மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். எமக்கு ஒரு நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். அவர்கள் சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவேண்டும் என துடியாய்த் துடித்தார். தேசப்பற்று அவரை எமது போராட்டத்தோடு இறுக்கப் பிணைத்தது. மக்களோடும், போராளிகளோடும் இணைந்து நின்று தாயக விடுதலைப்போரின் பெரும் பழுக்களைத் தானும் சுமந்துகொண்டார். நீண்டகாலமாக எமது விடுதலை இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளில் பெரும் பொறுப்புக்களைச் சுமந்து, தனது முதுமைக் காலத்திலும் உறுதியோடு உழைத்தார். தனது அறிவாற்றலாலும் கடும் உழைப்பாலும் தமிழரின் தேச சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் ஆற்றிய பணி என்றுமே பாராட்டுக்குரியது.

இவர் தமிழீழ மண் தந்த தலைசிறந்த எழுத்தாளர். ஆற்றல்மிக்க ஒரு கலை இலக்கியப் படைப்பாளி. சிறந்த அரசியற் சிந்தனையாளர். சிங்கள - பௌத்த பேரினவாதத்துடன் சதா கருத்துப்போர் நடத்தினார். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஓய்வில்லாமல் எழுதினார். எமது மக்களிடத்தில் விடுதலை உணர்வையும் தேசப்பற்றையும் தட்டியெழுப்பினார். சிங்கள இனவாத அரசின் பொய்யான பரப்புரைகளுக்கு சாட்டையடி கொடுத்து எமது தேசத்தின் உண்மை நிலையை உலகிற்கு தெளிவாக எடுத்துக்கூறினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர் எமது விடுதலை இயக்கம் ஒளிப்படத்துறையில் இன்று நிகழ்த்தியுள்ள பெரும் பாய்ச்சலுக்கு நடுநாயகமாக நின்று செயற்பட்டார். நிதர்சனம் நிறுவனம் தோன்றிய காலம்முதல் இற்றைவரை அதன் வேராகவும் விழுதாகவும் அதனைத் தாங்கிநின்று செயற்பட்டார். எமது விடுதலைப் போராளிகளை ஒளிப் படத்துறையில் பயிற்றுவித்து அவர்களைச் சிறப்பாக வழிப்படுத்தி, நெறிப்படுத்தி ஒரு தேசியத் தொலைக்காட்சியை உலகம் பூராகவும் ஒளிபரப்புகின்ற அளவிற்கு வளர்த்தெடுப்பதில் அச்சாணியாக இருந்து செயற்பட்டார். சிறிய குறும்படம் முதல் முழுநீளத் திரைப்படம்வரை பல்வேறு ஒளிப்பேழைகளை ஞானரதன் என்ற பெயரில் தயாரித்து நெறிப்படுத்தினார். இரத்தம் சிந்தி உயிர்விலை கொடுத்து எமது விடுதலை இயக்கம் களத்திலே படைத்த சாதனைகளையும் குவித்த வெற்றிகளையும் ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகைகளாகவும் விவரணங்களாகவும் தயாரித்து அவற்றை உலகின் கண்களுக்குக் காட்சிப்படுத்த உதவினார். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய விடுதலைப்பணி அளப்பரியது.

திரு.வை.சச்சிதானந்தசிவம்:ஞானரதன் அவர்களின் இனப் பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியைக் கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசியவிருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். சுயவாழ்வின் சுகபோகங்களைத் துறந்து தேசவிடுதலை எனும் உன்னத இலட்சியத்திற்காக உறுதியோடு வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. அவர்கள் எமது தேச ஆன்மாவில் நீங்காத நினைவுகளாகக் காலமெல்லாம் நிலைத்திருப்பார்கள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.